ஓம் நமசிவாய









SOUVENIR




Thiruthalaiyur Shri Parvathi Ambal Sametha

# Shri Baleshwara Swamy Thirukovil Kumbhabhishekam

April 12, Sunday, 2026

Thalaiyur-Nannilam Taluk, Thiruvarur District,

Tamil Nadu - 609 403


உ
JAYA JAYA SANKARA
HARA HARA SANKARA
SRI KANCHI KAMAKOTI PEETAM
KANCHIPURAM

☎ : 044-27222115
Fax : 044-27224305, 372090060

Email :-skmkanci@md3vsnl.netin

Sri Chandramouleeswaraya Namaha:
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta :

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

# JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

## Srimatam Samsthanam

No. 1, Salai Street, Kanchipuram - 631 502.

Date : 06.04.2026

Sri T.S.Ramanathan
President-Thalaiyur Veda Dharma Trust
230/3, Agraharam, Thaliyur,
Pavattakudi Post, Nannilam Taluk
Tiruvarur District – 609403

Namaskaram.

Sri Kanchi Kamakoti Peetathipathi Jagadguru Sri Sankaracharya Swamigal is happy to note about the proposed Kumbabhishekam of Parvathi Ambal Sametha Sri Baleswara Swamy Temple at Thiru Thalaiyur Village.

Celebrations like Kumbabhishekam etc are part of Dharma Prachara and will help in awakening about awareness of our Vedic Sanatana Dharma.

Sri Acharya Swamigal Blesses the committee members for a successful and meaningful conclusion of the Kumbabhishekam.

For SRI KANCHI KAMAKOTI PEETAM
SRIMATAM SAMASTHANAM
MANAGER

உ

அருள்மிகு சித்தி விநாயகர் துணை

ஸ்ரீ சிவமயம்









திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா, **திருத்தலையூர்**

**கிராமத்தில் எழுந்தருளியிருக்கும்**

## ஸ்ரீ பார்வதி அம்பிகாசமேத ஸ்ரீபாலேஸ்வர ஸ்வாமி திருக்கோவில்

## புனராவர்த்தன அஷ்டபந்தன

# மகா கும்பாபிஷேகப் பத்திரிக்கை

உம்பர்கட்கு அரசே ஒழிவறநிறைந்தயோகமே
ஊற்றையேன் தனக்கு
வம்பெனப்பழுத்து என்குடிமுழுது ஆண்டு வாழ்வற
வாழ்வித்த மருந்தே
செம்பொருட்டுணிவே சீருடைக்கழலே செல்வமே
சிவபெருமானே
எம் பொருட்டு உன்னை சிக்கெனப்பிடித்தேன் எங்கு
எழுந்தருள்வதினியே
(ஸ்ரீ மாணிக்கவாசகர்)

வலையொத்தவினை கலையொத்த மனம்
மருளப்பறையா றொலியொத்தவிதால்
நிலையற்றளியேன் முடியத்தகுமோ
நிகளம் துகளாகவரம் தருவாய்
அலைவற்றசை வற்று அனுபூதிபெரும்
அடியார்முடிவாழ்வைடூர்யமே
மலையத்து வசன் மகளே வருவாய்
மாதாஜெயஓம் லலிதாம்பிகையே
(ஸ்ரீ அகத்தியர்)

அன்புடையீர் வணக்கம்.

வடமொழியில் உபமன்யுமுனிவராலும் செந்தமிழில் சேக்கிழார் பெருமானாலும் விளக்கப்பெற்ற 63 நாயன்மார்களில் ஒருவர் ஸ்ரீ ருத்ரபசுபதி நாயனார் இவர்தன் வாழ்நாள் முழுவதும் கழுத்தளவு நீரில் நின்று கொண்டு 4-வேதங்களில் நடுநாயகமாக உள்ள கிருஷ்ணயஜுர்வேதத்தில் மத்திய பாகத்தில் வரும் ஸ்ரீ சிவபெருமானின் மகா மந்திரமாகிய ஸ்ரீ ருத்ரத்தை பாராயணம் செய்துவந்து இறைவன் திருவடிநிழலை அடைந்ததால் ஸ்ரீருத்ர பசுபதி நாயனார் என்ற திருநாமம் ஏற்பட்டது

இவர்தன் தலை மட்டுமே வெளியில் தெரியுமாறு தண்ணீரில் நின்று பாராயணம் செய்ததால் இவ்வூருக்கு திருத்தலையூர் என்ற பெயர் ஏற்பட்டது. இச்சிறப்பு மிகு தலையூரில் அமர்ந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ பார்வதி அம்பிகாசமேத ஸ்ரீ பாலேஸ்வர சுவாமி திருக்கோயில் இந்துசமய அறநிலையத்துறையால் திருப்பணி செய்யப்பட்டு உபயதாரர்கள் மூலமாக **மஹா கும்பாபிஷேகமானது** நிகழும் விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 29-ஆம் தேதி **(12-04-2026)** ஞாயிற்றுக்கிழமை திருவோண நட்சத்திரம் கூடியசுபயோக சுபதினத்தில் காலை 8-45 மணிக்குமேல் 9-45 மணிக்குள் ரிஷப லக்னத்தில் நடைபெற உள்ளதால் பக்தர்கள் பெரும் பங்குகொண்டு இறையருள் பெற கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
**கிராமவாசிகள்,இறைஅடியார்கள்**
திருத்தலையூர்

திரு.**ஆர்.செந்தில்குமார்**
இணைஆணையர் திருவாரூர்
இந்து சமய அறநிலையத்துறை

திரு.**சி.வீரபாண்டியன்**
உதவிஆணையர் திருவாரூர்
இந்து சமய அறநிலையத்துறை

திருமதி.**ஜீ.கவிதா**
துணை ஆணையர் திருவாரூர்
இந்து சமய அறநிலையத்துறை

திரு.**எம்.பாபு**
தக்கார் செயல் அலுவலர்
சிறுபுலியூர்

திரு.**எம்.கருணாநிதி**
ஆய்வாளர், பேரளம்.

## நிகழ்ச்சி நிரல்:

| | தமிழ் தேதி | ஆங்கிலதேதி | கிழமை | நிகழ்ச்சி நிரல் |
|---|---|---|---|---|
| மங்களகரமான விசுவாவசு வருடம் பங்குனி மாதம் | 26 | 09-4-2026 | வியாழன் | காலை 9-00 மணி அனுக்ஞை, ஸ்ரீவிக்னேஸ்வரபூஜை தனபூஜை கணபதி லக்ஷ்மி நவக்கிரஹஹோமங்கள் மாலை 7-00 மணிக்கு வாஸ்துசாந்தி மிருத்சங்க்ரஹணம் |
| | 27 | 10-4-2026 | வெள்ளி | காலை 10-மணிக்கு ப்ரசன்னாபிஷேகம் மாலை 5-00 மணிக்கு அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்,கலாகர்ஷணம் முதல்கால யாக பூஜை ஹோமம், இரவு 9-மணிக்கு பூர்ணாஹுதி,தீபாராதனை |
| | 28 | 11-4-2026 | சனி | காலை 8-00 மணிக்கு இரண்டாம் காலயாக பூஜை விமான கலசஸ்தாபனம் அஷ்டபந்தன மருந்து சாற்றுதல் பகல் 11-00 மணிக்கு பூர்ணாஹுதி தீபாராதனை மாலை 6-00 மணிக்கு மூன்றாம் கால யாக பூஜை ஹோமம் சுவாசினிபூஜை இரவு 8-00 மணிக்கு பூர்ணாஹுதி தீபாராதனை பிம்பசுத்தி, ரக்ஷாபந்தனம் |
| | 29 | 12-4-2026 | ஞாயிறு | காலை 7-15 மணிக்கு நான்காம் கால யாக பூஜை ஹோமம் நாடி சந்தானம் ஸ்பர்சாகுதி காலை 8-30 மணிக்கு மஹா பூர்ணாஹுதி தீபாராதனை காலை 8-45 கடம் புறப்பாடு காலை 9-00 விமான கும்பாபிஷேகம் காலை 9-30 மணிக்கு மூலமூர்த்திகள் மஹா கும்பாபிஷேகம் காலை 9-45 மணிக்கு தீபாராதனை பிரசாதம் வழங்குதல் தொடர்ந்து அன்னதானம் மாலை 4-15 மணிக்கு மஹாஅபிஷேகம் மாலை 6.15 மணிக்கு திருக்கல்யாணம், மாலை 6.45 மணிக்கு பிரஹார உலா இரவு 7.15 மணிக்கு பிரசாதம் வழங்குதல் மறு நாள் முதல் மண்டலாபிஷேகம் |

சர்வ சாதகம்
சிவத்திரு. M.நடராஜ சிவாச்சாரியார்
ஆகமப்ரவீணர், திருமருகல்

விழாக்காலஅர்ச்சகர்
சிவத்திரு.G.பார்வதீசன் சிவாச்சாரியார் பழையார்

ஸ்தல அர்ச்சகர்
திரு.R.சங்கர் குருக்கள் பாவட்டக்குடி

உதவி அர்ச்சகர்
திரு.S.சுந்தரேசசிவம் பாவட்டக்குடி

அனைவரும் வருக!

இறைஅருள் பெறுக !!

## கோவில் திருப்பணி உபயதாரர்கள்

கோவில் முழுவதும் கருங்கல் தளம் அமைத்தல்
ஸ்ரீ ருத்ரபசுபதி நாயனார் சன்னதி, மற்றும் முன்மண்டபம் அமைத்தல்
**அரண்பணி அறக்கட்டளை** கோயம்புத்தூர்

திருமடப்பள்ளி அமைத்தல்
தலையூர் பட்டாமணியார் **சுப்ரமணி ஐயர்** குடும்பத்தின் வாரிசுதாரர்கள்

மதில்சுவர் மேல் பாதுகாப்பு வேலி அமைத்தல்
**விஸ்வகர்மா சமூகத்தினர்** தலையூர்

அம்பாள் சன்னதி கதவு
**ரமணதீக்க்ஷதர்** சிதம்பரம்

மேல்நிலை தண்ணீர்தொட்டி மற்றும் செயல்பாட்டு தேவைக்கான குழாய் அமைத்தல்
தலையூர் **பாலசுப்பிரமணியம்** குடும்பத்தின் வாரிசுதாரர்கள்

விநாயகர் சிலை பிரதிஷ்டை
**தலையூர் வேத தர்ம டிரஸ்ட்** தலையூர்

## கும்பாபிஷேக உபயதாரர்கள்:

திருவாளர்கள் & திருமதிகள்

**K.ஜெயராமன்** அக்ரஹாரம், தலையூர்
தலையூர் **டி.வி.சூரியநாராயணன்** குடும்பத்தின் வாரிசுதாரர்கள்
**லக்ஷ்மி-கார்த்திக்** UAE
**டி.வி.ஸ்ரீனிவாசன்** மும்பை
**லலிதா-ரமேசன்** துபாய்
**கீதா மனோகர்** கனடா
**ரேணுகா- ஸ்ரீதர்** USA
**வசந்தி-ஆனந்த்** பெங்களூர்
**சாந்தி-சாய்ராம்** துபாய்
**சுபஸ்ரீ-மணிகண்டன்** பெங்களூர்
**லதா- ரவிகோபாலகிருஷ்ணன்** USA
**கல்பனா-ராமன்** நாக்பூர்
**கல்யாணி-ஜெயராமன்** சென்னை
**பி.சிவராமகிருஷ்ண ஐயர் குடும்பம்** சென்னை
**வி.வி.ஜெயராமன் குடும்பம்** கோயம்புத்தூர்
**தலையூர் வேத தர்ம டிரஸ்ட்** தலையூர்

மங்கள இசை: திரு. **கருணாகரன் & குழுவினர்** கீரனூர்
பந்தல் யாகசாலை: திரு. **சரவணன்** அருண்மொழிதேவன்
ஒலி ஒளி: திரு.A.ரவி ARS **சவுண்ட் சர்வீஸ்** கொல்லுமாங்குடி
புஷ்பம்: திரு.ராஜா பூக்கடை கொல்லுமாங்குடி

எதிர்வரும் பராபவ வருடம் வைகாசி மாதம் 17 ஆம் தேதி
**(31-05-2026)** ஞாயிறு மண்டலாபிஷேகப் பூர்த்தி நடைபெறும்.

# முகவுரை



T.S. ராமநாதன்

ஓம் நமசிவாய

அன்புடையீர், வணக்கம்.

எனது சொந்த ஊர் தலையூர், ஸ்ரீ ருத்ர பசுபதி நாயன்மார் அவர்களின் அவதார ஸ்தலம் என்பதில் பெருமை அடைகிறேன். எனது தந்தை தெய்வத் திரு T.V.சூரியநாராயணன் அவர்களுக்கு இந்த கோவில் மீது அதீத ஈடுபாடு இருந்தது. எங்கள் குடும்பம், வருடா வருடம் ஸ்ரீ பார்வதி சமேத ஸ்ரீ பாலேஸ்வரர் சுவாமி, மற்றும் ஸ்ரீ ருத்ரபசுபதி நாயனார் குருபூஜை (புரட்டாசி மாதம், அஸ்வதி நக்ஷத்திரம்) அபிஷேகம் மற்றும் ருத்ர பாராயணம், செய்வது வழக்கம்.

கடந்த 2006 ல் எனது தந்தையின் தலைமையில் இந்த கோவிலுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 20 வருடத்திற்க்கு பிறகு கும்பாபிஷேகம் செய்யும் பொறுப்பை ஏற்று, தலையூர் வேத தர்ம டிரஸ்ட் என்னும் அறக்கட்டளை அமைத்து, வருகின்ற 12/04/2026 ஞாயிற்று கிழமை அன்று தலையூர் ஸ்ரீ ஜெயராமன் அவர்கள் வழிகாட்ட மஹா கும்பாபிஷேகம் மற்றும் ஸ்ரீ ருத்ர பாராயண, திருப்பணி செய்ய திட்டமிட்டு உள்ளோம். உங்கள் அனைவரின் அன்பும், மனமார்ந்த ஆதரவும் அளிக்க கோருகிறோம்.

இப்படிக்கு,
**T.S. ராமநாதன்,**
**President**, தலையூர் வேத தர்மா ட்ரஸ்ட், தலையூர்.

# சிறப்புரை



லஷ்மி கார்த்திக்

ஓம் நமசிவாய

அன்புடையீர், வணக்கம்.

என் நினைவு தெரிந்த நாளில் இருந்தே ஒவ்வொரு வருடமும் என் தாத்தா தெய்வத்திரு. T.V.சூரியநாராயணன் அவர்களுடன் பாண்டிச்சேரியில் இருந்து திருத்தலையூருக்கு புரட்டாசி மாதம் அசுவதி நட்சத்திரத்தில் சென்று ஸ்ரீ பாலேஸ்வரர் சுவாமி, ஸ்ரீ பார்வதி அம்மன் மற்றும் ஸ்ரீ ருத்திரபசுபதி நாயனார் குரு பூஜை, அபிஷேகம், ஆராதனை மற்றும் ஸ்ரீ ருத்திரபாராயணம் செய்து வருகிறோம். என் பிறந்த நாளும் புரட்டாசி மாதம் பரணி நட்சத்திரம் என்பதால் என் ஆயுட்சயஹோமம் முதல் ஒவ்வொரு வருடமும் குருபூஜக்கு மறுநாள் என் பிறந்தநாளை திருத்தலையூரில் என் தாத்தா கொண்டாடி

வந்தார் என்பது குறிப்பிடதக்கது. குழந்தை பருவத்தில் திருத்தலையூருக்கு வருவது எனக்கு மகிழ்ச்சியும், இன்பமும் தரக்கூடிய ஒரு அனுபவமாக இருந்தது. ஆனால் அதன் முக்கியத்துவம் தெரியவில்லை.

தெய்வீக சூழல்கொண்ட திருத்தலையூரும், கோவிலும், ஸ்ரீ பாலேஸ்வரர் அருளாலும் என்னுள் படிப்படியாக பக்தி உருவானது.

என் தாத்தாவுக்கு துணையாக மட்டும் அல்லாமல் உதவி செய்யவும் ஸ்ரீ பாலேஸ்வரர் அருளியதால் இத்தருணத்தில் நான் மிக்க நன்றியை தெரிவிக்க கடமைபட்டுள்ளேன். ஸ்ரீ பாலேஸ்வரர் எனக்கு எல்லாமும் ஆகி அவருடைய கருணையும், அன்பையும், அருளையும் என் வாழ்வின் ஒவ்வொரு தருணங்களிலும் அளித்து வருகிறார்.

“அவனருளாலே அவன் தாள் வணங்கி” என்று சிவபுராணத்தில் உள்ளது. அது போலவே அவர் எனக்கு அருளவில்லை என்றால் அவருடைய கோவிலுக்கு ஒவ்வொரு வருடமும் தவறாமல் என் தாத்தாவுடன் சேர்ந்து அபிஷேகத்தை கண்டும் ஸ்ரீ ருத்திரபாராயணத்தை கேட்டும் களித்திருக்க முடிந்திருக்காது.

மேலும் என் வாழ்வில் மறக்க முடியாதது என்னவென்றால். என் திருமணம் முடிந்த 2014-ஆம் ஆண்டு நான் என் கணவர் திரு.கார்த்திக் ராம்குமார் அவர்கள் என் மாமனார் மாமியாருடன் குருபூஜைக்கு வந்திருந்தேன். வழக்கமாக என் தாத்தா தான் உட்கார்ந்து சங்கல்பம் செய்துகொள்வார். ஆனால் இம்முறை என் கணவரை உட்காரச்சொல்லி சங்கல்பம் செய்ய வாய்ப்பு கொடுத்ததை நானும் என் கணவரும் ஒரு பெரிய பாக்கியமாக கருதுவதுடன் எங்கள் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு நிகழ்வாக எண்ணுகிறோம். ஸ்ரீ பாலேஸ்வரர் என் தாத்தா மூலமாக எங்களுக்கு கருணைபுரிந்து அந்த வாய்ப்பை தந்ததாக நானும் என் கணவரும் இன்றுவரை நினைத்து மகிழ்கிறோம்.

Covid 2020 ஆண்டை தவிர ஸ்ரீ பாலேஸ்வரருக்கு நாங்கள் திருப்பணி செய்யாத வருடமே இல்லை எனலாம்.

இதற்கு பிறகும் இந்த குருபூஜையில் கலந்து கொண்டு எங்கள் பங்களிப்பை தருவதற்கு ஸ்ரீ பாலேஸ்வரர் அருளும் துணையும் தரவேண்டும் என்று கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறோம்.

இப்படிக்கு,

**லஷ்மி கார்த்திக் UAE,**

மகள் வழி பேத்தி **T.V சூர்யநாராயணன்.**



28/03/2026 சனிக்கிழமை அன்று திரு. பவானி தியாகராஜன் ஐயா அவர்கள் (அறம் பணி அறக்கட்டளை) திரு. K. ஜெயராமன் மற்றும் திரு. T.S. ராமநாதன் அவர்களிடமிருந்து கும்பாபிஷேக பத்திரிக்கையை கோவிலின் மாகாமண்டபத்தில் பெற்றுக்கொள்கிறார். இடம்: தலையூர் ஸ்ரீ பாலேஸ்வரர் சுவாமி திருக்கோவில்.

## ஸ்ரீ ருத்ர மந்திரம்

நமஸ்தே அஸ்து பகவன் விச்வேஸ்வராய
மஹாதேவாய த்ரயம்பகாய த்ரிபுராந்தகாய
த்ரிகாக்னி காலாய காலாக்னீ ருத்ராய
நீலகண்டாய ம்ருத்யுஞ்ஜாய ஸர்வேஸ்வராய
ஸதா சிவாய ஸ்ரீமன் மஹாதேவாய நம.
சிங் சிங் சிவாய ஓம்





# Thalaiyur Shri Parvathi Ambal Sametha Shri Baleshwara Swamy Thirukovil

At Thiruthalayur, there is an ancient Shiva temple called Sri Parvati Samedha Sri Baleswarar Devasthanam, believed to be constructed by the Cholas in the small village of Thiruthalayur, now located in Nannilam taluk, Thiruvarur District (17 km south of Mayiladuthurai and on the Nedungadu-Karaikal route via Kollumaangudi).

**For Loka Kshema and Loka Kalyana**
**We thank you for your support and participation.**



Shri Baleshwara swamy



Shri Parvathi Ambal



Shri Rudhra Pasupathi Nayanar


# Rudra Pasupathi Nayanar



- Rudra Pasupathi Nayanar was the 16th Nayanar saint among the 63 Nayanmars.
- Periya Puranam (13th century CE) and Thiruthondar Thogai (10th century CE) detail his legendary life and services to Shiva.
- Rudra Pasupathi Nayanar was born in a pious Brahmin family in the small village of Thiruthalayur, now located in Nannilam taluk, Thiruvarur District (17 km south of Mayiladuthurai and on the Nedungadu-Karaikal route via Kollumaangudi).
- Rudra Pasupathi Nayanar was an ardent Shiva devotee. He used go to the Pond in the early morning and evening and chant Shri Rudram Chamakam with folded hands raised above his head. The hymn hails Shiva as the Supreme Being and accords the reciter Shiva's grace. The vibration of the intense prayer of the Nayanar is described to have reached the abode of Shiva, who pleased with the Nayanar's devotion grants him Salvation.
- Tamil month Purattasi – Ashvini star is widely celebrated as Day of Rudra Pasupathi Nayanar's Salvation.




1987 ஆம் ஆண்டு, புரட்டாசி அஸ்வனி அன்று திருத்தலையூரில்,
எங்கள் வேதகுரு ப்ரும்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள், (தனது சிஷ்யர்களுடன்
ஸ்ரீருத்ர பாராயணம் செய்யும் காட்சி



பார்வதி அம்பாள் ஸ்ரீ பாலேஸ்வரர், திருத்தலையூர்



குளத்தில் இறங்கி பண்டிதர்கள் ருத்ரம் ஓதுகிறார்கள். ஸ்தலம்: திருத்தலையூர்



சிவ சிவ திருச்சிற்றம்பலம் சிவ சிவ

சேக்கிழார் பெருமான்
அருளிச் செய்த

திருத்தொண்டர் புராணம்
என வழங்கும்

பெரிய புராணத்தில்

உருத்திர பசுபதி நாயனார் புராணம்

6—10—90 சனிக்கிழமை (புரட்டாசி அஸ்வினி)
ஸ்ரீ ருத்ரபசுபதி நாயனார் மோக்ஷமடைந்த ஸ்தலமான தலையூரில் நடந்த மஹாருத்ர ஹோமத்தின்போது சென்னை சூளைமேடு ஸ்ரீ ருத்ரபசுபதிருத்ர பாராயண ஸபாவினரால் வெளியிடப்பட்டது.

# உருத்திர பசுபதி நாயனார் புராணம்

நிலத்தின் ஓங்கிய நிலந்தெழும் பெரும்புனல் நீத்தம்
மலர்த்த உம்ப வயல்புகு பொனனிநன் இட்டுக்
குலத்தீன் ஓங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித்
தலத்தீன் மேம்படு நவத்தது பெருந்திருத் தலையூர் 1

வான ளிப்பன மறையவர் வேள்வியின் வளாதீ;
தேன ளிப்பன நறுமலர் செறிசெழுஞ் சோலை:
ஆன ளிப்பன அஞ்சுகந் தாடுவார்க்(கு) அவ்வூர்
தான ளிப்பன தருமமும் நீதியும் சால்பும் 2

அங்கண் மாநகர் அதனிடை அருமறை வாயமைத்
துங்க வேதியர் குலத்தினில் தோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்க னாரடி மைத்திறம் புரியக பதியார். 3

ஆய அந்தணர் அருமறை உருத்திரங் கொண்டு
மாய னாரரி யாமலாச் சேவடி வழுத்துந்
தூய அன்போடு தொடர்பினில் இடையறாச் சுருதி
நேய நெஞ்சின ராகிஅத் தொழிலதலை நின்றார் 4

கரையில் கம்பலை புள்ளொளி சுறங்கிட மருங்கு
பிரசு மென்சுரும் பறைந்திடக் கருவரால் பிறழும்
நிறைநெ டுங்கயல் நீரிடை நெருப்பெழுந் தணைய
விரைநெ சுழ்ந்தசெ கமலமெ பொய்கையன் மேவி 5

தெள்ளு தண்புலை கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை உச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்டிறை கங்கைநீத ததும்பிய சடையார்
கொள்ளும் அனபினில் உருத்திரங் குறிப்பொடு பயன்றார் 6

அரும் றைப்பய னாகிய உருத்திரம் அதனை
வருமு றைப்பெரும் பகலும்எல் வியும்வழு வாமே
திரும லர்ப்பொகுட் டிருந்தவன் அனையவர் சிவநாள்
ஒருமை உய்த்திட உமைஇடம் மகிழ்ந்தவர் உவந்தார் 7

காதல் அன்பர்தம் அருந்தவப் பெருமையும் கலந்த
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி
ஆதி நாயகர் அமர்ந்தருள் செய்யமற் றவர்தாம்
நீதி லாநிலைச் சிவபுரி எல்லையிற் சேர்ந்தார் 8

நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்
ஆடு சேவடி அருகுற அணைந்தனர்; அவர்க்குப்
பாடு பெற்றசீர் உருத்திர பசுபதி யாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற 9

அயில்கொள் முக்கும் மிப்படை யார்மருங் கருளால்
பயில்உ ருத்திர பசுபதி யார்திறம் பாசி
எயிலு டைத்தில்லை எல்லையில் நாளைப்போ வாராம்
செயலு டைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை மொழிவாம் 10

**ஸ்ரீ ருத்ர மந்திரம்**

* மூல மந்திரம்:
ஓம் நம சிவாய / ஓம் நமச்சிவாய
* பஞ்சாட்சர வரிசை:
ஓம் சிவயநம – யநமசிவ – மசிவயந
– வயநமசி – நமசிவய



# Thalaiyur – Pitha Maha-
# Sri T.V.Surianarayanan Mama



T.V. Surianarayanan

Thalaiyur Pitha Maha Sri. T.V. Surianarayanan mama (father of T.S.Ramanathan sir) who despite being an octogenarian managed the Shiva Temple single handedly for so many years and kept the torch burning for us. We miss him quite a bit. He was our guide about Thalaiyur. He narrated many things about Thalaiyur to us. He mentioned that there used to be a madam there and Maha Periyava would visit. He mentioned that Periyava once stated that Thalaiyur was like His right eye. Periyava had also visited when there was a flood in the area and He arrived in His Palanquin. Periyava also said that there was a madam in Thalaiyur and known for Veda Parayanam.

# Thalaiyur as I know it

**By T.V.Sreenivasan**



T.V.Sreenivasan

Fondly called Pichai Chithappa- another Thalaiyur Stalwart

Thalayur is a sanctuary defined by the Nattavaykal River and the spiritual embrace of its three guardians: the Shiva, Perumal, and Mariamman temples. While the Shiva and Perumal temples were meticulously cared for by Thottam, Sri T.N.Vaithianatha Swamy Iyer and his family with the support of the residents, the Mariamman Temple remains the heart of the community, managed by the local people themselves. I vividly remember the sacred at mosphere created by the Sivachariyars' prayers and the peaceful visits to the Swamiji at the Shiva Madam by the river. Opposite the Shiva Temple, the pond was always brimming with water, serving as a center for our ritual baths and the vibrant energy of festival days.

The village carries a beautiful "Mann Vasana" that stays with me, even as the Agraharam has changed from a bustling community of twenty-five families to just a few original houses. My happiest memories are rooted in the holidays when we would return to the Mariamman Temple and the spirit of the village. Those days were marked by simple joys like heading to Peralam to watch movies and enjoying the famous Peralam Vadais with relatives. Though many of us have moved to cities, the Mariamman Temple remains our anchor, a place where the fragrance of the soil and the blessings of the Goddess are forever intertwined in my heart.

# திருத்தலையூர் - வரலாறும் சிறப்பும்



Dr. T.S. சுதா

மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் சாலையில், கொலுமங்குடியிலிருந்து காரைக்கால் செல்லும் வழியில் பேருந்து சாலையில் பாவட்டக்குடி என்ற நிறுத்தத்தில் இறங்கி நாட்டாறு என்ற ஆற்றினை கடந்து சென்றால் திருத்தலையூர் என்ற கிராமத்தை அடையலாம். இத்திருத்தலத்தில் நாட்டாற்றின் தென்கரையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது ஸ்ரீ பார்வதி அம்பாள் சமேத ஸ்ரீ பாளேஸ்வரர் திருக்கோவில்.

கி.பி ஆறாம் நூற்றாண்டில் இந்தக் கோவில் செங்கல் கோவிலாக இருந்துள்ளது. கி.பி பத்தாம் நூற்றாண்டில் தஞ்சை மண்டலத்தில் ஆட்சி செய்த சோழர்கள் இதைக் கருங்கல் கோவிலாக மாற்றி அமைத்துள்ளனர். கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டில் மாற்றாரின் படையெடுப்பால் கோவில் சிதைவடைந்து விட்டது. அதன் பிறகு இந்தக் கோவிலை இடம் பெயர்த்து வந்து விஜயநகர மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நாட்டாற்றின் கரையில் திரும்பப் புனரமைத்துள்ளனர் என்பது தெரிகிறது.

கல்வெட்டுகளின் வழி, சோழர் காலத்தில் நிர்வாகம், திருவிழாக்கள், திருக்கோயிலின் நித்தியப்படி கட்டளைகள், மலர் அலங்காரம் முதலியன தடைப்படாமல் நடப்பதற்கு நிலம் கொடைகளாக கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமம் ஸ்ரீ பாலேஸ்வரர் என்றும், அம்மன் ஸ்ரீ பார்வதி தேவி என்றும் தொன்றுதொட்டு புகழ்ந்து போற்றப்பட்டு வருகிறார்கள். லிங்க உருவம் கருநில கல்லால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திருவுருவம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. கருவறை அடுத்து அர்த்த மண்டபமும் கருங்கற்களால் சோழர் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளது.

கிழக்கில் மகாமண்டபமம் நீண்ட செவ்வக வடிவில் கட்டப்பட்டுள்ளது. இம்மகாமண்டபம் தமிழகத்தில் நாயக்க மன்னர்களுக்கு அடுத்ததாக வந்த மராட்டிய மன்னர்களால் கட்டப்பட்டுள்ளது. மண்டபத்தில் அம்மன் சன்னதியும் உள்ளது. நந்திபகவான், விநாயகர் மற்றும் வள்ளி தேவசேனா மகாமண்டபத்தில் அருள் பாலிக்கின்றார். திருச்சுற்றில் வடக்கு பார்த்தபடி நாயன்மார் ருத்ர பசுபதியார் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. கோவிலின் தலை விருட்சமாக வில்வ மரம் காட்சியளிக்கிறது. கோவிலில் ஒரு கிணறும் இருக்கிறது. ஸ்ரீ ருத்ர பசுபதி நாயனார் சன்னதிக்கு எதிராக தக்ஷிணாமூர்த்தி சன்னதி உள்ளது. ஸ்ரீ பாலேஸ்வரர் சன்னதிக்கு பின்புறம் லிங்கோத்பவர், சுற்றி வரும்போது சண்டிகேஸ்வரர், மற்றும் விஷ்ணு துர்க்கையும் காட்சியளிக்கின்றனர்.

இத்திருக்கோவிலின் தென்கரையில் சுமார் இரண்டு ஏக்கர் பரப்பளவில் திருக்குளம் அமைந்துள்ளது. வடக்கே ஓடும் நாட்டாற்றில் இருந்து இந்தக் குளத்திற்கு தண்ணீர் வருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. குளத்தின் வடகரையில் கோவிலை ஒட்டிப் படித்துறையும் அமைக்கப்பட்டுள்ளது.

2006-ல் என் தந்தை தெய்வத்திரு சூரியநாராயணன் அவர்கள் இக்கோவிலில் பணியை ஏற்று புனரமைப்பு செய்யும்போது நவகிரக சிலைகளையும், கால பைரவர் சன்னதியும் நிறுவினார்.

வேதங்கள் நான்கினையும் போற்றுவது பாரததேசத்தில் வாழும் நம் அனைவரின் கடமையாகும். ஸ்ரீ ருத்ரத்தின் சாரத்தன்மையாலும், ஸ்ரீ ருத்ரமே வேதத்தின் மையம் அல்லது இதயம் என்பதாலும், ஸ்ரீ ருத்ர பாராயணம் செய்தால் வேதங்கள் அனைத்தையும் பாராயணம் செய்த பலன் கிடைக்கும்.

யஜுர் வேதத்தின் ஏழு காண்டங்களில் நான்காவது காண்டத்தில் பதினோராவது அனுவாகத்தில் உள்ள ஸ்ரீ ருத்ரம் மேலானது. ஸ்ரீ ருத்ரத்தில் பஞ்சாட்சரமே மேலானது. பஞ்சாட்சரத்தில் “சிவ” என்ற இரண்டு எழுத்துக்கள் மிக உயர்ந்தவை. சிவபெருமானின் உயரிய வடிவங்களில் ஒன்றாக ஸ்ரீ ருத்ரன் கருதப்படுகிறார். அதாவது அடியார்களின் துன்பத்தைப் போக்குபவன் என்பதே அதன் பொருள். யஜுர் வேதத்தின் மத்தியில் அமைந்துள்ள ருத்ரத்தை பாராயணம் செய்து மோக்ஷம் அடைந்தவர் அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவரான ஸ்ரீ ருத்ர பசுபதி நாயனார். பெருமை வாய்ந்த ஸ்ரீ ருத்ரத்தை ஓதியே இறைவன் திருவடிகளை ருத்ர பசுபதி நாயனார் அடைந்தார்.

ஸ்ரீ ருத்ர பசுபதி நாயனார் திருத்தலையூரில் கி.பி ஆறாம் நூற்றாண்டில் அந்தணர் குலத்தில் பிறந்தார். இவர் நான்கு வேதங்களிலும் தேர்ச்சி பெற்று புகழுடன் விளங்கினார்.

இக்காரணத்தினாலேயே அவருக்கு “ருத்ர பசுபதியார்” என்ற திருநாமம் கிடைத்தது. அவர் ஊர் குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று கொண்டு காலையிலும் மாலையிலும் ஒருமைப்பாட்டுடன் ஸ்ரீ ருத்ரத்தை ஓதி வந்தார். இது அவருடைய அருந்தவமாகும்.

பல ஆண்டுகளாக அவர் இவ்வாறு ஜபம் செய்து வந்தார். புரட்டாசி மாத அஸ்வினி நட்சத்திரத்தில் அவர் சிவபதம் அடைந்த நாள் நினைவாக மக்கள் அனைவரும் திருக்குளத்தில் நின்று ருத்ரம் ஓதியும், கோவிலில் வழிபாடுகள் செய்தும் குருபூஜை இன்றளவும் நடத்தியும் வருகின்றார்கள்.

இப்படிக்கு

**Dr. T.S. சுதா**

**D/o T.V. சூரியநாரயாணன்**

# History of Thiruthalaiyur Kshetram

**Om Namasivaya**

Among the four Vedas, six Vedangas, and four Upangas, **"Sri Rudram"** is great and superior. It is found in the fourth kandam of Yajur Veda. The Panchakshara (Nama Sivaya) is found in the middle of Sri Rudram. So, all Astigis are chanting Sri Rudram in daily poojas, japas and homas etc., from time immemorial.

It is believed that Sri Rudram represents the Goddess Parvathi, Wealth and Peace. All these three put together is called Sri Rudram in the name of Lord Siva

**"Rud"** means sufferings and **"Thiram"** means removal ie, removal of all sufferings. It also gives happiness. To Vedapurusha, the Rudram is the eye, and the eye ball is compared to Panchakshara. This is described by Saint Thirugnanasambanthar Nayanar as:

வேதம் நான்கினும் மெய் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயமே.

**Thiruthulaiyur** is a beautiful and fertile village situated on the southern banks of river Nattar, a branch of river Arasalar in Nanillam Taluk of Thiruvarur district. It is 17 Kms. south of Myladuthurai and on the way to Karaikal via Kolumangudi. **Pasupathiyar** lived in this village. He chanted Sri Rudram continuously and attained Mukthi. So, he was included in the Thiruthandathagai of Saint Sundramoorthy Nayanar. Pasupathiyar used to stand in neck deep water in a tank in Thiruthalaiyur and chant Sri Rudram without break with hands raised above his head in adoration. Day-in and Day-out he lived, breathed and had his being in Sri Rudram. Since, the head alone was seen above water level and as the flesh of his body was eaten away by fishes and only bones remained, the village was called as **"Thalaiyur"**. He is also called **"Ruthra Pasupathiyar"** as he chanted the Sri Rudram constantly and attained mukthi. as

The efficacy of the holy place **"Thalaiyur"** is so great, Saint Sundramoorthy Nayanar, Nambiyandar Nambi and Sekkizhar described the dignity of the village in their works. Sekkizhar depicts the life of Pasupathiyar in Periyapuranam. Being an orthodox Brahmin, Pasupathiyar was well versed in the Vedas and Sastras. He continuously worshiped Lord Siva with constant divine pursues and fervour. Lord Shiva who is easily approachable by true devotees facilitated salvation to him. He attained mukthi in the first astrides (Asupathy) of Kanya month. The salvation day festival of Rudra Pasupathy Nayanar is celebrated every year at Thiruthalaiyur by the devotees.

The temple is in the northern side of the village Thiruthalaiyur. It is a beautiful temple extended in less than one acre area facing east. The Lord is **"Sri Baleswarar"** and **Goddess** is **"Sri Parvathi".** The idol of Rudra Pasupathiyar is in the southern prakara (circumambulatory path) of the temple facing Sri Dakshinamoorthy. The sacred pond, where the Nayanar used to stand and chant Sri Rudram is on the southern side of the temple.

The temple was built, and few acres of cultivating lands was endowed in the name of the temple by the forefathers of **Shri T.V.Surianarayanan**, a retired Commercial Tax officer, Pondicherry. His father late Shri. T. N. Vaithyanathaswamy Aiyar maintained the temple in good condition. Daily poojas were conducted without any problem. In his last days he handed over the temple to the Hindu Religious and Charitable Endowments (Admn.) Department, Government of Tamil Nadu. Now, the temple is in dilapidated condition. Shrubs and plants invaded the temple premises and damaged all the vimanas, mandapas, prakaras, compound walls etc.

The Vasantha Mandapam and the kitchen are more. Shri. T.V. Surianarayanan and his devotee friends of the village are taking serious steps to repair and renovate the temple with the help of devotees. The renovation work is in progress with the contributions of the devotees.

the date for **Kumbabishekam** is also fixed on Friday, 03.11.2006. Ardent devotees of Nayanars and the Shri Rudram are requested to show their benevolence for the renovation work for such holy temples in an opportunity to serve God and to do good things in the life of a man, as such of these temples will speak the glory of our culture and spiritual heritage.

OM NAMASIVAYA

## Kumbabishegam - 2006

The Jeernodharana Ashtabandhana Maha Kumbabhishekam of the ancient shrine of Sri Parvathy Samedha Sri Baleswarar temple at Tiruthalaiyur in Nannilam taluk (17 km south of Mayiladuthurai and on the Nedungadu-Karaikal route via Kollumaangudi) was held on November 3$^{rd}$. 2026

Sundaramoorthy Nayanar, Nambiyandar Nambi and Sekkizhar have also described the importance of the village in their works. After 40 years, the temple has been renovated.

The Tirukkayilaya Parambarai Dharumai Adheenam has brought out literary works and other publications.


**Renovation completed**

The task of deweeding the temple and its restoration has been quite challenging.

According to Shri T.V.Surianarayanan, the cost of renovation was met from devotees' donations. The kumbabhishekam of the main shrine was scheduled for 10 a.m. on November 3rd 2006. The consecration of shrines dedicated to Sri Mariamman, Sri Ayyanar and Sri Madathu Pillaiyar was also held a few hours in advance.


உ
ஸ்ரீருத்ர பசுபதி நாயனர் கழுத்து அளவு
நீரில் நின்று ஸ்ரீ ருத்ர ஜபம் செய்த
திருக்குளமும் கோயிலும்

3.11.2006, வெள்ளியன்று நடைபெற்ற கும்பாபிஷேகதன்று மாலை
5மணிக்கு நடைபெற்ற மஹாப்ரதோஷ, மஹாபிஷேக சமயத்தில்
ஸ்ரீ சிதம்பரம் ப்ரும்மஸ்ரீ P.மஹாதேவ தீக்ஷிதர் (கனபாடிகள்) தலைமையில்
ஸ்ரீருத்ர கனபாராயணம் நடைபெற்றது.


உ
ஸ்ரீ இஷ்டஸித்தி விநாயகர் துணை
அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய
ஸ்ரீ ருத்ர பசுபதி நாயனார் அவதரித்து
ஸ்ரீ ருத்ர பாராயணத்தால் மோக்ஷமடைந்த திருத்தலையூரில்
**ஏகதின மஹாருத்ரம்**
நாள் : 10-12-2006 ஞாயிறு

ஸ்ரீ ருத்ரபசுபதி நாயனார், தலையூர்

நீடும் அன்பினி லுருத்தர மோதிய நிலையால்
ஆடு சேவடி யருகுற வணைந்தன ரவர்க்குப்
பாடு பெற்றசீர் உருத்திர பசுபதி யாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற

**ஸ்ரீ ருத்ர மந்திரம்**


**ஸ்ரீ ருத்ர காயத்ரீ**

**ஓம் தத்புருஷாய வித்மஹே**
**மஹா தேவாய தீமஹி**
**தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்**



# My Anubhavam(experience) with Sri Parvathy Sametha Baleshwarar

***By Sridhar Srinivasa Sharma***



S. Sridhar

It was the summer of 1971 or 1972 – when I was spending the summer in Ashoknagar Athimber Dr. Natesa Iyer"s house, who had the unique privilege of administering Ayurvedic medicine to Maha Periyava .A young boy wearing a Dhothi called out asking for Bhiksha I asked him if he could chant a mantra. He immediately recited the Sri Rudram flawlessly – to our surprise. Eesan knows if He Himself had come there that day – because it propelled me to learn Sri Rudram years later.

I invited one Pandit Sivaramakrishnan who asked me to come to the temple to learn Rudram and I went there once or twice – In this way the years passed by and 2008 arrived. My mama called me one day and said the Kumbhabhishekam at Palaiyur had been completed. We went to the temple and did an archana and when the gurukkal was doing the archana – there was a man standing next to me talking on his phone – which irritated me as the archana was going on – but what he said on the phone to the other party – was " Na Saravananan oda Appa – Na Saravanan oda Appa three times –meaning I am Saravanan's Father !!" (the deity in Swami Malai is Saravanan -also known as Subrahmanyam, Swaminathan, or Murugan—who is Sivas son) and disappeared – At that moment I could not draw any conclusions about that brief encounter. Then the archana was over and the Gurukkal came out and was offering the Karpura Aarathi Thattu to take our blessings from Him – He had a garland on his hand that apparently adorned Swaminatha swami – which he flung at my chest.

My mother said:" Hey Abhi – (my home name) – lets also go to Thalaiyur (my father's hometown) which is nearby "So we went to Thalaiyur. We visited the Sivan Kovil that was at the end of the Agraharam on our way back. So we went to the Sivan Kovil only to find the outer gate locked . A person came and asked do you want to see the Kovil?—We said Yes – and so he pulled out a key and opened so we went inside and looked around but the door to the inner prakharam was still locked and Iwhispered to my myself – we had come all this way and how could it be that we will not be able to get darisanam – and within 5 minutes – we heard a moped arriving and guess who had arrived – the Gurukkal – and I was stunned. The gurukkal said that normally he would only come at 5 PM but

today he had asked an electrician to fix the lights inside and so he had come early – logical enough. He then gave us Karpura Arati Darisinam of Baleshwarar and Parvati Ambal and Valli Devasena Sametha Subrahmanya Swami – and Kanni Moola Ganapathy – Rudra Pasupathi Nayanar and he said that Purattasi Maasam (sept -oct time frame close to Navaratri) – Rudra Pasupathy Nayanar was standing in the pond with water upto his neck and chanting the Rudram when Parameswaran took him to His own abode. The presiding Nakshatra on that day was Ashwini for his Moksha Dinam – The gurukkal went on to say that every year to commemorate this event – Vadhyars and Deekshitars from Chidambaram would stand in the pond to recite the Rudram – on Purattasi Maasam – Ashwini Nakshatram day – and during the eleventh Anuvakam – it would promptly rain on the pond – We were stunned to hear this and slowly thoughts were building in my head to come back to witness that incredible event. Thanks to Baleshwarar who took pity on me.

I returned to California and narrated all these things to Pandit Sivaramakrishnan – who immediately initiated me into Rudram training—So for almost 1 year I learnt how to chant the Rudram and Chamakam – counting the days to go back to Thalaiyur.

August 2009 I was called and said there was a Maharudram in Chicago and if I could come there as a Ritwik We went into the Chinmaya Mission where the Maharudram was being conducted and when they announced the Sankalpam – the Vadhyar announced Purattasi Maasam and Ashwini Nakshtram – and I was stunned!! The Lord had come to Chicago just to make sure I see Him on that sacred day – which was Rudra Pasupathi Nayanars Moksha Dinam—my joy knew no bounds.

On returning to Los Angeles, we planned the first Maharudram in Los Angeles ever for 2010 and it was a huge success. From that year onwards, Pandit Sivaramakrishnan would perform an Ekadasa Rudram event at the temple in Los Angeles for Purattasi Maasam Ashwini nakshatram day. My friendship with Pandit Sivaramakrishnan blossomed as we did an Athi Rudram, and many Yajnas including a program called Aarupadai Veedu, Soma Skanda Sapta Sathi Yajna in 2022. Even though I met Pandit Sivaramakrishnan in the US only in 2004—we discovered through my wedding photo album that He had officiated as the priest at my wedding in 1989 – almost 15 years earlier – There is no way to explain this Divine Connection made possible by Baleshwarar.

# Rudra Pasupathy Nayanar Moksha Dinam Celebrated in Los Angeles



During all these transactions from 2008 to 2016 – Shri. T.V. Surianarayanan mama (father of Ramanathan sir) - who despite being an octogenarian managed the Sivan Temple single handedly for so many years and kept the torch burning for us. I miss him quite a bit. He was my guide about Thalaiyur. He narrated many things about Thalaiyur to me. He mentioned that there used to be a matham there and Maha Periyava would visit. He mentioned that Periyava once stated that Thalaiyur was like His right eye. Periyava had also visited when there was a flood in the area and He arrived in His Palanquin. Periyava also said that there was a matham in Thalaiyur and known for Veda Parayanam.

During this time period I learned a few facts about my great grandfather Sri Srinivasa Iyer. Most important among them being the following

He was conducting Panchayathana Puja at his home- which means he should have chanted the Rudram also. I have also heard that my grandfather TS Venkatarama Iyer gave away the panchayathana set to a matham - I have not observed my grandfather do pujas to a Siva linga at home.

Apparently, there was a Vilva tree in our house compound.

Sri Srinivasa Iyer also would only eat after giving Bhiksha each day (remember Balan)

He would also follow a Nama Sankeerthanam using Ulukkai (Pounding stone - Bhagawan Nama) to pound the husked rice paddy to remove the husk (Maya) and reveal the pure rice inside – The import is to remove the maya that was preventing the real nature of rice to be exposed – the ural (grinding stone).

When I was born to Mr. T.V. Balasubramaniam and Rajamani Ammal my grandfather Mr. T.S. Venkatrama Iyer decided to name me after His late father Mr. T.V. Srinivasa Iyer

In 2024, when my Athai visited Bala Periyava who had camped in Nagpur and mentioned the temple in Thalaiyur and that we were getting ready for a Kumbhabhishekam – Bala Periyava recognized this and gave His Aseervadhams for the planned Kumbabhishekam. There are greater things in store for Thalaiyur as we continue to work together to preserve this Holy Site and protect the Agrahara from any commercial developments.

**ஸ்ரீ ருத்ர மந்திரம்**

**மஹா மிருத்யுஞ்ஜய மந்திரம்:**
**ஓம் த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்**
**உர்வாருகமிவ பந்தனான்**
**ம்ருத்யோர் முக்ஷய மாம்ருதாத்**

# சிறப்புரை



வெ.தியாகராஜன்

எழும்பூரிலிருந்து நீராவி என்ஜின் பொருந்திய புகைவண்டியில் பள்ளி விடுமுறையில் திருத்தலையூர் செல்ல பெற்றோருடன் பயணம் மேற்கொண்டோம் சுமார் பத்து வயது சிறுவனாக இருந்த பொழுது ரயிலில், சென்ற பொழுது அளவு கடத்த மகிழ்ச்சி ஏற்பட்டது. கொல்லுமங்குடி ரயில் நிலையத்தை அடைந்தவுடன் எனது சித்தப்பா திரு. கிருஷ்ண மூர்த்தி அவர் மரமாட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு ரயில் நிலையத்தில் இருந்து எங்களது பூர்வீக வீட்டிற்கு அழைத்து சென்றார் எனக்கு சிறு வயதானாலும் சில நிகழ்ச்சிகல் பசுமையாக என் மனதில் இருக்கின்றது வழி எங்கும் பறவைகளின் ஒலி, எங்கும் பசுமையான வயல்வெளிகள் மக்கள் எல்லோரும் காலையிலேயே வயல் வேலைக்கு வந்தது எனக்கு ஆச்சரியமாகவும், சந்தோஷமாகவும் இருந்தது வழி எங்கும் பார்ப்பவர்கள் எல்லோடும் என் பெற்றோரைப் பார்த்து நலம் விசாரித்தனர் மிக்க சந்தோஷம் கிடைக்கப்பெற்றோம்.

எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு என் தந்தை பிறந்த ஊருக்கு வந்திருக்கிறார் அவருக்கு மிருந்த மகிழ்ச்சி பாதை நெடுக மணல் பாதை தான் சிறு சிறு குளம், குட்டைகள் மாடுகள் தீனி திண்னும் அழகு, தண்ணீர் குடிக்கும் அழகு அவை அனைத்தும் ரசித்தேன். காவிரி ஆற்று தண்ணீர் நாட்டு வாய்க்காலில் பாசனத்திற்காக ஓடிக் கொண்டிருந்தது ஆங்காங்கே சிறிய வீடுகள் காணப்பட்டது தென்னை, மாமரம், புளியமரம் செடி கொடிகள் எங்கும் காணப்பட்டது கிராமத்திற்கு செல்ல வேண்டிய பாதையை கடந்துவிட்டோம். கிராம மக்கள் மிகவும் எளிமையாகவும் மிருந்த உற்சாகத்துடன் காணப்பட்டார்கள். எங்கள் அக்ரஹாரத்தில் செல்ல முயன்ற பொழுது அங்கு சிறிய ஓலை குடிசையில் சீதலா தேவி மாரியம்மன் கோவில் தென்பட்டது. அங்கிருந்து கிராமத்தின் வீட்டிற்கு சென்றோம் அந்த வீடு மிகவும் பழமையான வீடு திண்ணை, பெரிய கூடம், அறைகள், முற்றம், தாழ்வாரம் வீட்டின் பின்புறம் அனைத்தும் பார்த்தோம். அக்காலத்தில் மின்சார விளக்குகள் நமது வீட்டில் இல்லை.

கூடத்தில் நெற்பயிர் சேர்த்து வைக்க பெரிய மரத்தால் ஆன குதிர் இருந்தது. பசுமாடு, எருமை மாடு, கன்று குட்டிகள் எல்லாம் வீட்டிற்கு உள்ளே இருந்தது நமது வீட்டிற்கு அருகாமையில் ஒரு சிவன் கோவில் காணப்பட்டது, பல நூற்றாண்டை கடத்த கோவில் அங்கு ஸ்ரீ பாலேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீ பார்வதி அம்மன், ஸ்ரீ ருத்ர பசுபதி நாயனார் சன்னதிகள் உள்ளன. அருகில் பெருமாள் கோவில் உள்ளது. விஷேச தினங்களில் ஹோமம், உற்சவங்கள் நடைப்பெறும் அழகிய சிறிய கிராமத்தில் சிலநாட்கள் தங்கி பிறகு சென்னை புறப்பட்டோம், ஸ்ரீ ருத்ரபசுபதி நாயனார் குளத்தில் தவம்செய்து முக்தி அடைந்த ஸ்தளம் திருதலையூர் கிராமம் இது எனது சிறு வயது அனுபவம்.

என்றும் அன்புடன் **வெ.தியாகராஜன்**
சென்னை-61.

# Thiruthalaiyur Temple Photo Gallery



Before Renovation - Temple Front View - 2006




After Renovation - Temple Front View - 2006




Reciting Rudhra Parayanam in the temple




Uzavarapani by the Local School Childrens



Urchavar Mandabam



Shri Baleshwara Swamy



Shri Parvathy Amman



Shri Rudhra Pasupathi Nayanar



Navagrahas installed in 2006



Statues of few Gods



Shri Rudhra Pasupathi Nayanar



Balalayam 2026



Shri Baleshwara Swamy



Shri Parvathy Amman





Shri Rudhra Pasupathi Nayanar - Muulavar

Shri Rudhra Pasupathi Nayanar - Urchavar




Renovation - Front View - Before & After 2026





Side View of the Temple - 2026




Scan for Location


## Thalaiyur Veda Dharma Trust

Regd. No. BK IV/5/2026

230/3, Agraharam, Thalaiyur, Pavattakudi Post,
Nannilam Taluk, Thiruvarur District, Tamil Nadu - 609 403.

## Contact

Phone: 72002 26829 / 97900 23110
Email: thiruthalaiyurtrust@gmail.com
visit @ www.thalaiyurtrust.org